**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No:** 133/2019 நாள் 20.09.2025.

பிவாசா.1, திரு. K.P.லட்சுமணன்

**பிவாசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார் –**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கமூலத்தில் உள்ள சங்கதிகளை தயார் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் சொன்னேன். வழக்கில் உள்ள மற்ற எதிர்வாதிகள் நிரூபண வாக்கமூலத்தை தயார் செய்துகொள்ள தகவல் சொல்ல வரவில்லை நானும் மற்ற எதிர்வாதிகள் அனைவரும் கலந்து பேசி தான் அவர்களுக்காக வேண்டியும் நானே அனைத்து விபரங்களும் சொன்னேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையும் நானும் மற்ற எதிர்வா்திகளும் கலந்து பேசி தான் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. நானும், 1, 2 எதிர்வாதிகளும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பிராது சொத்தை பொறுத்தமட்டில் கடந்த 12.04.1995ம் ஆண்டு எனக்கும் என் தகப்பனாருக்கும் இடையில் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் இந்த பிராது சொத்துக்களை தவிர இதர சொத்துக்களையும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்று நான் சொல்லியுள்ளேன். அந்த இதர சொத்துக்கள் என்ன என்ன மற்றும் என்ன வகைப்பாடு என்று கேட்டால் என் தகப்பனாரும் அவரது தம்பியும் சேர்ந்து சில சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார்கள். மேலும் என் தகப்பனார் மட்டுமே எங்கள் சார்பாக வேறு சில சொத்துக்களையும் கிரையம் வாங்கியுள்ளார். 1967 மற்றும் 1975ம் ஆண்டு சர்வே எண்.257/1, 257/2 சொத்துக்களை என் அப்பாவும என் சித்தப்பாவும் சேர்ந்து வாங்கியதில் அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டதில் 257/1 மற்றும் 257/2 சொத்துக்கள் என் அப்பாவின் பாகத்திற்கு கிடைத்தது மீதம் உள்ள பகுதி என் சித்தப்பாவின் பாகத்திற்கு கிடைத்தது அதன் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. அதை தவிர தெற்குவெங்காநல்லூர் கிராமத்தில் சர்வே எண்.431/1சி, அதில் சுமார் 4 அல்லது 4 1/2ஏக்கர் எங்கள் சார்பாக என் அப்பா கிரையம் வாங்கியுள்ளார். சர்வே எண்.257/1, 257/2 சொத்துக்கான கிரைய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. அந்த ஆவணங்களை பார்த்தால் தான் அதன் உண்மை நிலவரங்கள் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.257/1, 257/2 க்கான சொத்தானது ஆவணம் எண்.270/1968 ஆக இராஜபாளையம் சார்பதிவக அலுவலகத்தில் பதிவாகியுள்ளது. இந்த ஆவணங்களை பார்த்தால் நீதிமன்றத்திற்கு உண்மை நிலவரங்கள் தெரியவந்துவிடும் என்பதால் தான் நான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அப்படியில்லை. 12.04.1995ம் ஆண்டு எனக்கும் என் அப்பாவுக்கும் இடையில் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டுவிட்டது என்பதை காண்பிக்ககூடிய ஆவணம் உள்ளதா என்று கேட்டால் 28.10.2002ம் ஆண்டு நோட்டரி பப்ளிக் முன்பாக நாங்கள் ஆவணம் எழுதிக்கொண்டதாக ஒரு ஆவணம் எழுதப்பட்டது. நாங்கள் தாக்கல் செய்துள்ள

எதிர்வழக்குரையில் 12.04.1995ம் ஆண்டு எங்களுக்குள் சீட்டுக்குழுக்கி வாய்மொழியாக பாகம் ஏற்படுத்திக்கொண்டதை எழுதிக்கொண்டதாக சொல்லியுள்ளேன். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை தாக்கல் செய்யவில்லை எங்களால் மாதிரி ஆவணமாக எழுதிக்கொள்ளப்பட்டது. அதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னை இதற்கு முன்பு குறுக்கு விசாரணை செய்த போது வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாகவும் எந்த ஒரு ஆவணமும் எழுதிக்கொள்ளவில்லை என்று சாட்சியம் அளித்திருந்தேன் என்றால் வாய்மொழியாக தான் பிரித்துக்கொண்டதாக சாட்சியம் அளித்தேன். எங்கள் தரப்பில் பி.வா.சா.ஆ.2 ஆவணமாக குறியீடு செய்துள்ள ஆவணம் என்னவென்று கேட்டால் 28.10.2002ல் நோட்டரி பப்ளிக் முன்பாக என் அப்பா பொன்னம்பலமும், என் அண்ணன் குத்தாலிங்கமும் , நானும் சேர்ந்து எழுதிக்கொண்ட குடும்ப ஏற்பாடு பத்திரம் ஆகும்.28.10.2002ம் தேதியில் தான் நானும் 1ம் எதிர்வாதியும் என் அப்பாவும் சேர்ந்து நோட்டரி பப்ளிக் முன்பாக கையொப்பம் செய்தோம். அதன் பின்பு நாங்கள் யாரும் நோட்டரி பப்ளிக் முன்பாக ஆஜராகி கையொப்பம் செய்யவில்லை. மேற்படி 28.10.2002ம் தேதியிட்ட ஆவணத்திற்கான முத்திரை தாளை யார் பெயரில் வாங்கப்பட்டது என்று கேட்டால் 1ம் எதிர்வாதியான குத்தாலிங்கம் மற்றும் என் பெயரில் வாங்கப்பட்டது. அந்த முத்திரை தாள்களை எந்த ஊரில் வாங்கப்பட்டது என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை. அந்த குடும்ப ஏற்பாடு பத்திரத்தில் எத்தனை முத்திரை வில்லைகளை நான் வாங்கினேன் என்று கேட்டால் எத்தனை தாள்கள், எத்தனை ரூபாய்க்கு என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி பிவாசா.ஆ.2 ஆவணத்திற்கான முத்திரைதாள் எத்தனை என்பதையும் எவ்வளவு ரூபாய்க்கு என்று எனக்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக வேண்டி எனக்கு ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. 28.10.2002ம் தேதியிட்ட் ஆவணத்தில் நோட்டரி பப்ளிக் எந்த தேதியில் கையெழுத்து போட்டார் என்று கேட்டால் 28.10.2002ம் தேதிக்கு பிறகு கையெழுத்து போட்டார் அது எத்தனை நாட்களுக்கு பிறகு என்று எனக்கு தெரியவில்லை. நோட்டரி பப்ளிக் கையெழுத்து செய்த சமயத்தில் நாங்கள் மூவரும் உடனில்லை என்று சொன்னால் நாங்கள் மூவரும் உடன் இருந்தோம் சாட்சி கையொப்பம் செய்த ஒருவரும் உடனிருந்தார். 28.102002ம் தேதியில் நான் நோட்டரி பப்ளிக் முன்பாக வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றும் அன்றைய தேதியில் நான் பணியில் இருந்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதுசரியல்ல. 28.10.2002ம் தேதியில் என் தகப்பனார் உயிரோடு இருந்தபோதுஅவர் பெயரில் முத்திரை தாள்களை வாங்காமல் எதற்காக என் பெயரிலும் , 1ம் எதிர்வாதி பெயரிலும் வாங்கப்படடது என்று கேட்டால் என் தகப்பனார் சொத்தானதை எங்களுக்கு வாய்மொழியாக பிரித்துக்கொடுத்ததால் முத்திரை தாள்களை என் மூத்த சகோதரர் பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி 28.10.2002ம் ஆண்டுக்கான முத்திரை தாள்களை எந்த கணினி மையத்தில் தட்டச்சு செய்யப்பட்டது

என்றும் அதை யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சாஆ.2 ஆவணத்தில் தட்டச்சு செய்தவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற கேட்டால் ஞாபகமில்லை. என்னிடம் கேட்கப்படும் அனைத்து கேள்விகளுக்கும் என்னால் பதில் சொல்லமுடியும் என்று தற்போது வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. இந்த வழக்குரை சொத்துக்களை பொறுத்தமட்டில் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுத்தது சம்மந்தமாக வாதிகளாகிய என் சகோதரிகளுக்கு நாங்கள் எழுத்துமூலமாகவோ , வழக்கறிஞர் மூலமாகவோ தகவலை அனுப்பியுள்ளோமா என்று கேட்டால் இல்லை. பிவாசாஆ.2 ஆவணத்தில் பெண்மக்களை பற்றி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பொது குடும்ப சொத்தில் பொறுத்து பொது குடும்ப உறுப்பினர்களுக்கு பங்குரிமையுள்ள சொத்தானதில் ஆவணம் எழுதிக்கொள்ளும் போது பொதுக்குடும்ப உறுப்பினர்கள் அனைவருமாக சேர்ந்து அந்த ஆவணத்தை எழுதிக்கொள்வதாகவும் அதில் அவர்களும் தரப்பினர்களாக இருக்கவேண்டும் என்ற சட்ட நியதி உள்ளது என்றும் சொன்னால் எனக்கு சட்ட நியதி பற்றி தெரியவில்லை. பிவாசாஆ.2 ஆவணத்தில் என் உடன் பிறந்த சகோதரிகளை சேர்க்காமல் எழுதிக்கொள்ளப்பட்டதால் பிவாசாஆ 2 ஆவணம் செல்லாது என்று சொன்னால் அதுசரியல்ல. பிராது சொத்துக்கள் அனைத்தும் பொதுகுடும்ப சொத்துக்கள் என்றும் அதில் வாதிகளாகி பெண்மக்களுக்கு சமபங்கு உள்ளது என்று சொன்னால் நான் அதை மறுக்கிறேன். என் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ், மற்றும் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி என் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ், மற்றும் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்தால் வாதிகளுக்கு தாவா சொத்தில் பங்குபாகம் உள்ளதுஎன்பது தெரிந்துவிடும் என்பதற்காக வேண்டி அதை மறைத்து நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் உள்ளேன் என்று சொன்னால் அப்படியில்லை. பிவாசாஆ.2 ஆவணத்தை எழுதிக்கொள்ளவதற்கு யார் முதலில் முடிவெடுத்ததுஎன்று கேட்டால் என்அப்பா என்னையும் என் மூத்த சகோதரையும் அழைத்து்வைத்து சொல்லி என் அப்பா தான் முடிவெடுத்தார். பிவாசாஆ.2 ஆவணம் எழுதிக்கொள்ள நான் தான் முடிவெடுத்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் நான் அதை மறுக்கிறேன். இந்த வழக்குரை சொத்தை பொறுத்தமட்டில் வாதிகளாகிய பெண்களும் எதிர்வாதிகளாகிய நாங்கள் ஆண்களுக்குள்ள சம உரிமை வாதிகளுக்கும் பங்குரிமைதாரர் என்றும் வாதிகளுக்கும் பிராது சொத்தில் பங்குபாகம் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.நான் தினசரி நாளிதழை தமிழ் அல்லதுஆங்கிலம் உள்ளதை நான் படிப்பேன். மேற்படி தினசரி நாளிதழ் மற்றும் செல்போன்கள் மூலமாக வெளியாகும் செய்திகளில் ஹிந்து பொதுக்குடும்ப கூட்டுக்குடும்ப சொத்தில் பெண்களும் கூட்டு பங்காளிகள் என்ற தகவல்கள் வெளியாகி வரும் என்ற விபரத்தை நான் படித்து தெரிந்துள்ளேன். ஹிந்து பொதுக்குடும்ப கூட்டுக்குடும்ப சொத்தில் அந்த குடும்பத்தில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு பிறந்த நாள் முதற்கொண்டே சொத்தில் உரிமை ஏற்பட்டுவிடும்

என்ற சொன்னால் அது சரியல்ல. வாதிகள் பிராதில் சொல்லியுள்ள 21வது அயிட்ட சொத்தானது வீடாகும். அந்த வீடானது வார்டு .ஜி.21 புலஎண்.129/4 வீடாகும். அதன் கதவிலக்கம் 60. பிராது 21வது அயிட்ட சொத்தானது தற்போது யார் பெயரில் உள்ளது என்று கேட்டால் என் அண்ணன் 1ம் எதிர்வாதியான குத்தாலிங்கம் பெயரில் உள்ளது.அவர் பெயருக்கு முன்னாடி அந்த சொத்து யார் பெயரில் இருந்தது என்று கேட்டால் என் அப்பா பெயரில் உள்ளது. என் அப்பா பெயரில் உள்ள பிராது 21வது அயிட்ட சொத்தானதை 12.04.1995ம் ஆண்டு ஏற்பட்ட வாய்மொழிபாகப்படியும் பிவாசாஆ.2 ஆவணப்படியும் என் அப்பா பெயரில் இருந்து என் அண்ணன் பெயருக்கு மாறியது. என் அண்ணன் பெயருக்கு பத்திரமாக மாறவில்லை பட்டாவாக மாறியுள்ளது. அந்த பட்டாவானது எந்த ஆண்டு என்று எனக்கு ஞாபமில்லை. இந்த விபரங்கள் எதன் அடிப்படையில் எப்பொது மாறியது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. தற்போது வரையிலும் பிராது 21வது அயிட்ட சொத்தான கதவு எண்.60 கொண்ட வீடானது என்அண்ணன் 1ம் எதிர்வாதியான குத்தாலிங்கம் பெயரில் தான் உள்ளது அது வேறு யார் பெயரிலும் மாறவில்லை. என் அப்பா இறக்கும் காலம் வரையிலும் கதவிலக்கம் 45 (அயிட்டம் எண் 23) உள்ள விலாசத்தில் வைத்து தான் இறந்துபோனார். அயிட்டம் எண்.23 ஆன கதவிலக்கம் 45 ஆனது தற்போது யார் பெயரில் உள்ளது என்று கேட்டால் என் அப்பா பெயரில் தான் உள்ளது. பிராது சொத்துக்களை பொறுத்து என் அப்பா நான்கு பாகங்களாக பிரித்து தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றும்அந்த ஆவணங்களை என்அப்பா இறந்துபோன பின்பு அதனை நான் அழித்து விட்டு தற்போது வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. பிவாசாஆ.3, 4 ஆவணத்தில் கண்ட சொத்துக்களானது எந்த சர்வே எண் மற்றும் எந்த வகைப்பாடில் உள்ளது என்றால் 27.06.2019 குத்தாலிங்கம் தனது மகன் பொன்னம்பலத்திற்கு தானசெட்டில்மெண்ட் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அது ஆவணம் எண்.2614 ஆகும். அதன் பரப்பளவு 1 ஏக்கர் 26 சென்ட் முதலில் விவசாய நிலமாக இருந்து தற்போது குடியிருப்பு நிலமாக மாறியுள்ளது. அதில் யாரும் விவசாயம் செய்யவில்லை குடியில்லை. ( பி.வா.சா.ஆ.3). பி.வா.சாஆ.4 ஆவணப்படிக்கு 27.06.2019ம் ஆண்டு நான் என் மகன் பொன்னம்பலம் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணமாக பதிவு செய்யப்பட்டது. அந்த ஆவணம் எண்.2615 ஆகும் அதன் பரப்பளவு 1 ஏக்கர் 26 சென்ட் முதலில் விவசாய நிலமாக இருந்து தற்போது குடியிருப்பு நிலமாக மாறியுள்ளது. அதில் யாரும் விவசாயம் செய்யவில்லை குடியில்லை. என் அண்ணன் மகன் பொன்னம்பலம் என் மகன் பொன்னம்பலம் பெயருக்கு 27.06.2019ம் தேதியே பெயர் மாற்றமானது. 27.06.2019ம் தேதியில் பட்டா வாங்கவில்லை. டிசம்பர் மாதம் 2019ம் தேதியில் பட்டா வாங்கப்பட்டது. பிவாசாஆ.3 மற்றும் 4 ஆவணத்தில் கண்ட சொத்தானது தற்போது இராஜபாளையம், புதுப்பாளையம் , ஆர்.ஆர்.நகரில் உள்ளது. பிவாசாஆ.2 ஆவணப்ப்டிக்கு பிவாசாஆ.3 மற்றும் 4 ஆவணம்

ஏற்படுத்தப்போவதாக சொல்லி வாதிகளுக்கு நாங்களோ வழக்கறிஞர் மூலமாகவோ எழுத்துப்பூர்வமாகவோ ஏதேனும் சொல்லிக்கொள்ளபட்டதா என்றுகேட்டால் இல்லை. பிவாசாஆ.5 ஆவணத்தில் தபசில் கண்ட சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று கேட்டால் சமுசிகாபுரம் கிராமத்தில் உள்ளது. பிவாசாஆ.5 ஆவணத்தில் தபசில் கண்ட சொத்தின் வகைப்பாடு நஞ்சை ஆகும். அதன் சர்வே எண் தற்போது எனக்கு ஞாபகமில்லை. அந்த பட்டா எண்.15361 . அது என் அண்ணன் குத்தாலிங்கம் பெயரில் உள்ளது.வேறு யாருக்கும் அது கூட்டு பட்டாவாக இல்லை. பிவாசாஆ.6 ஆவணத்தில் தபசில் கண்ட சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று கேட்டால் சமுசிகாபுரம் கிராமத்தில் உள்ளது. அது கிணறு ஆகும். அதன் பட்டா எண்.1057. பிவாசாஆ.7 ஆவணத்தில் தபசில் கண்ட சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று கேட்டால் சமுசிகாபுரம் கிராமத்தில் உள்ளது. அது 1ம் எதிர்வாதியின் பெயரில் உள்ளது அது புஞ்சை நிலமாகும். அதன் பட்டாஎண்.1057. பிவாசாஆ.8 ஆவணத்தில் தபசில் கண்ட சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று கேட்டால் தெற்கு வெங்காநல்லூர் கிராமத்தில் உள்ளது. அது 1ம் எதிர்வாதியின் பெயரில் உள்ளது அது நஞ்சை நிலமாகும். அதன் பட்டாஎண்.7993. அது கூட்டுப்பட்டா பெயரில் இல்லை. பிவாசாஆ.9 ஆவணத்தில் தபசில் கண்ட சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று கேட்டால் தெற்கு வெங்காநல்லூர் கிராமத்தில் உள்ளது. கிணறு ஆகும். அதன் பட்டாஎண்.1114. பிவாசாஆ.10 முதல் 12 ஆவணங்களில் தபசில் கண்ட சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று கேட்டால் இந்த சொத்தானது எங்களுக்கு என் அப்பா யாருக்கும் கொடுக்கவல்லை. இந்த சொத்துக்கும் எங்களுக்கும் எந்த உரிமையும் பாத்தியமில்லை. பிவாசாஆ.10 முதல் 12 வரையிலான ஆவணங்களை பொறுத்து நான் சாட்சியம்அளித்துள்ளது தவறு என்றால் நான் தவறாக பிராது 1 முதல் 24 அயிட்ட சொத்துக்களாக நினைத்து தவறாக சாட்சியம்அளித்துவிட்டேன். பிவாசாஆ.13 ஆவணத்தில் தபசில் கண்ட சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று கேட்டால் ஆர்.ஆர்நகரில் குத்தாலிங்கம் தனது மகன் பொன்னம்பலத்திற்கு தானசெட்டில்மெண்ட்டாக எழுதிக்கொடுத்த சொத்தின் SLR ஆவணமாகும். பிவாசாஆ.13 ஆவணத்தில் கண்ட சொத்தின் சர்வே எண்.114/7, 114/8. மேற்படி சர்வே எண்.114/7 ல் குத்தாலிங்கம் மகன் பொன்னம்பலம் பெயருக்கும் 114/8 ல் லட்சுமணன் மகன் பொன்னம்பலம் பெயரில் உள்ளது. பிவாசாஆ.2 ஆவணப்படிக்கு பிவாசாஆ.13 ல் கண்ட சொத்தானது தற்பொழுது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று கேட்டால் குத்தாலிங்கம் மகன் பொன்னம்பலம் அனுபவத்திலும், என் மகன் பொன்னம்பலம் அனுபவத்திலும் உள்ளது அதற்கான சான்றாவணங்களை சமர்ப்பிக்கவில்லை. மேற்படி பிவாசாஆ.13 ல் கண்ட சொத்தானது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த பிவாசாஆ.13 ல் கண்ட சொத்தானது பொதுக்குடும்ப சொத்து என்று சொன்னால் SLR மட்டுமே நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி SLR என்பது எந்த ஆண்டில் இருந்து எந்த ஆண்டு வரைக்கும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் 2020 ல்

இருந்து தற்போது வரை தாக்கல் செய்துள்ளேன். பிவாசாஆ.15 ஆவணத்தில் கண்ட சொத்தானது அரசியாபட்டி கிராமத்தில் பட்டா எண்.369 ல் உள்ளது அது புஞ்சை நிலம் ஆகும். அதன் மொத்த பரப்பளவு 1 ஏக்கர் 20 சென்ட் ஆகும். அதன் புல எண்.229/1 ஏ ஆகும். தற்பொழுது வரையிலும் அந்த நிலமானது என் தகப்பனார் பொன்னம்பலம் பெயரில் உள்ளது. மேற்படி என் அப்பா பெயரில் இந்த நிலம் உள்ளதால் பொதுக்குடும்ப சொத்து என்று சொன்னால் இன்று வரையிலும் பிரிக்கப்படாமல் உள்ளது. எனவே மேற்படி சொத்தானது வாதிகளுக்குமற்றும்1, 2 எதிர்வாதிகளுக்கும் பாகம் உள்ளது என்றால் அது சரிதான். பிவாசாஆ.16 ல் கண்ட சொத்தானது பிராது 21 வ துஅயிட்ட சொத்தான வீடாகும். அது தற்போது வரையிலும் 1 ம் எதிர்வாதியான குத்தாலிங்கம் பெயரில் தான் உள்ளது. கிழக்கே என் சித்தப்பா மகன் பொன்னுரங்கம்வீடு உள்ளது. வடக்கே காலிநிலமாக இருந்துதற்போது தறி செட்டு உள்ளது. தெற்கே கிழமேல் தெரு. மேற்கே சந்து. அந்த சந்தில் நிறைய பேர் குடியிருக்கிறார்கள். அந்த சந்தில் குடியிருப்பவர்களை விசாரித்தால் தான் இந்த சொத்தானதுயாருடைய அனுபவத்தில் உள்ளது என்று தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி வடக்கே உள்ள தறிச்செட்டை 1 ம் எதிரி குத்தாலிங்கம் மற்றும் அவரது மகன் நடத்தி வருகிறார்கள்.மேற்படி தறிச்செட்டிற்கான மின் இணைப்பானது 1 ம்எதிர்வாதி மகன் பொன்னம்பலம் பெயரில் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. அந்த தறிச்செட்டை 1 ம் எதிர்வாதி குத்தாலிங்கம் மகன் பொன்னம்பலம் தான் நடத்திவருகிறார் என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. பிவாசாஆ.17 ல் கண்ட சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது என்று கேட்டால் குத்தாலிங்கம் மகன் பொன்னம்பலத்திற்கும் லட்சுமண பெருமாள் மகன் பொன்னுரங்கத்திற்கும் பாத்தியப்பட்டது. இந்த சொத்தானது பொது குடும்ப சொத்து என்றும்அது வாதிகளுக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகளுக்கு இந்த சொத்தில் பங்கு கொடுக்ககூடாது என்பதற்காக வேண்டி நானும், என் மகனும், 1 ம் எதிர்வாதியும், அவரது மகன் மற்றும் அவரது மனைவி சேர்ந்து கூடி பேசி மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் அது சரியல்ல. பிவாசாஆ.19 ல் கண்ட சொத்தின் வகைப்பாடு என்னவென்றுகேட்டால் ஆவணத்தை பார்த்தால் சொல்லமுடியும். பிராதில் 24 வது அயிட்ட சொத்து தான் பிவாசாஆ.19 ல் கண்ட சொத்துஎன்று நினைக்கிறேன். அதன் பட்டா எண்.2994 . சர்வே எண்.65/2 ஆகும். இந்த சொத்தானது தற்போது என் அண்ணன் பெயரிலும் என் பெயரிலும் உள்ளது. பிவாசாஆ.19 ஆவணத்தை வாதிகளை மோசம்செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நானும், என் அண்ணனும் சேர்ந்து எங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி வருவாய் துறையில் இருந்து பெற்ற ஆவணம் என்று சொன்னால் அது சரியல்ல. பிவாசாஆ.20 ஆவணத்தில் கண்ட சொத்தானது சர்வே எண்.106/1 ல் கண்ட கிணறு ஆகும்.அது கூட்டுப்பட்டாவில் உள்ளது யார் பெயரில் என்று தெரியவில்லை நானும் என் அண்ணனும் இருக்கிறோம். நான் கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கை எதிர் நடத்துவதால் பிவாசாஆ.20 கண்ட கூட்டு பட்டாவில் உள்ள பெயரை எனக்கு நினைவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன்என்றால் அது

சரியல்ல.பிவாசாஆ.21ல் கண்ட சொத்துக்கு உள்ள நான்குமால்கள் என்னவென்று கேட்டால் தற்போது என்னால் சொல்ல நினைவில்லை. பிவாசாஆ.21ல் கண்ட சொத்தானது பொதுக்குடும்ப சொத்து என்பதாலும் எங்களது அனுபவத்தில்இல்லை என்பதாலும் தற்போதுஅதற்கான நான்கு எல்லைமால்கள் சொல்வதற்கு நினைவில்லை என்று நான் தவறாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. பிவாசாஆ.22ல் கண்ட சொத்தானது சமுசிகாபுரத்தில் உள்ள வயல்காடு ஆகும். அதன் பட்டா எண்.884. தற்பொழுது என் அப்பா பொன்னம்பலம் பெயரில் உள்ளது. தற்பொழுது அந்த சொத்தும் என் அப்பா பெயரில் இருந்து வருவதாலும் அது பொதுகுடும்ப சொத்து என்பதாலும் அதில் வாதிகளுக்கு பங்குபாகம் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. பிவாசாஆ.24ல் கண்ட சொத்தானது அதன் பட்டா எண்.1057 அது கிணறு ஆகும். அது பொதுவாக தான் உள்ளது. பிவாசாஆ.24ல் கண்ட சொத்தானது கூட்டுப்பட்டா இல்லை என்றும் அது என் அண்ணன் பெயரில் தனிப்பட்ட பட்டா உள்ள சொத்து என்று சொன்னால் அது சரியல்ல. பிராதில் கண்ட சில சொத்துக்களை நானும் என் அண்ணனும் சேர்ந்து பேசி எங்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து கொண்டோம் என்றும் பிராதில் கண்ட சொத்துக்கள் அனைத்து வாதிகளுக்கு பங்குபாகம்உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனாரை கடைசி காலத்தில் நான் தான் பார்த்து வந்தேன் என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என் மனசாட்சி படி நான் தான் அவரை பார்த்து வந்தேன். என் அப்பாவின் கடைசி காலத்தில் அவரை வாதிகள் தான் பார்த்தார்கள் என்றும் நான் பார்த்ததாக வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் அதுசரியல்ல. பிவாசாஆ.2 ஆவணத்தில் என் அப்பா கையொப்பம் செய்ய மறுத்தார் என்றும் நான் தான் அவரை மிரட்டி பயமுறுத்தி அதில் கையெழுத்து செய்ய வைத்தேன் என்றால் அதுசரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ.28வது ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகளுக்கு வழக்கில் கோரிய பரிகாரங்கள் கிடைக்ககூடியவை என்றும் பிவாசாஆ.2 ஆவணமானது மோசடியான ஆவணம் என்றும் அது செல்லத்தக்கதல்ல என்றும் அது போல் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களும் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. பிவாசாஆ.2 ஆவணத்தில் சொல்லியுள்ள தமிழ் ஆண்டானது 1178 என்று நான் சொல்லியுள்ளது போல் எந்த ஒரு ஆண்டும் அப்படியில்லை என்றுசொன்னால் அது சரியல்ல. பஞ்சாங்கப்படி 1178 என்பது கொல்லம் ஆண்டு என்றும் 2033 என்பது திருவள்ளுவர் ஆண்டை தான் குறிக்கும் என்று சொன்னால் சரிதான். அதில் ஸ்ரீ சித்திரபானு ஆண்டு ஐப்பசி மாதம் 11ம் தேதி என்று குறிப்பிட்டுள்ளதும் தவறு என்று சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ.2 முதல் பிவாசாஆ.28 வரையிலான ஆவணங்கள் எனது அதிகாரத்தை பயன்படுத்திக்கொண்டு வருவாய் துறையில் இருந்து பெற்று அதில் வாதிகளுக்கு பிராது சொத்தில் எந்த பாகமும்

கொடுக்ககூடாது என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் அதுசரியல்ல. எனவே பிவாசாஆ.2 முதல் பிவாசாஆ.28 வரையிலான ஆவணங்கள் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது சரியல்ல. எனவே வாதிகள் அவரளது பங்கு பெற அவர்களுக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 20th day of September 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.